முனைவோர் 25 விழுக்காடு விளிம்புத் தொகையுடன் முன்வருவார்களேயானால் அம்மாதிரி இடங்களைத் தேர்ந்தெடுத்து விரைவாக ஆரம்பிப்பதற்கு அரசு தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 129, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 130, திரு. ஆ. சுப்புரத்தினம்; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

130–

பெண் சிசுக் கொலை புகார்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.

*20133–**திரு. ஆ. சுப்புரத்தினம்:**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

பெண் சிசுக் கொலை தொடர்பான குற்றங்களுக்காக கடந்த ஓராண்டு காலத்தில் எவ்வளவு பேர்கள் மீது புகார்கள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கக் கூடிய வகையிலே தங்களை பேரவையினுடைய துணைத் தலைவராக நியமித்து இன்றைக்கு நம்முடைய மாவட்டத்திற்கு ஒரு சிறப்பை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பொற்பாதங்களை வணங்கி, என் சார்பாகவும் நம் மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா மாவட்ட பொது மக்களுடைய சார்பாகவும் என்னுடைய நன்றியை இந்த நல்ல வேளையிலே தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆம் என்று பதில் கூறியிருக்கிறார்கள். இப்படி பெண் சிசு கொலை நடைபெறுவது இன்னும் தொடர்கிறது என்றால் எந்தெந்த மாவட்டங்களில் இந்த பெண் சிசு கொலைகள் அதிகம் நடைபெறுகிறது என்ற புள்ளிவிவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

1994 ஜனவரி 3]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் ஓராண்டுக் காலத்தில் எவ்வளவு பேர்கள் மீது புகார்கள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று கேட்டிருக்கிறார்கள். 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 17 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் 2 புகார்கள் மீது குற்றவாளிகளை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த பெண் சிசு கொலை தொடர்பான திட்டங்களை அறிவித்ததன் மூலமாக இன்றையதினம் சேலத்திலும் குழந்தைகள் தொட்டிலுக்கு வருவது குறைந்து இருக்கிறது. ஏறக்குறைய நான்கு மாத காலமாக தொட்டிலில் குழந்தைகள் விழுவது தடுக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் திட்டம், டாக்டர் புரட்சித் தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் விளைவாகவும் இன்றைக்கு இந்த பெண் சிசு கொலை கடுமையாக தடுக்கப்பட்டிருக்கிறது என்பதை பேரவையின் மூலமாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10.40

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி வரக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெண் குழந்தைகளைப் பாதுகாக்கும் முகத்தான் பெண்களுடைய சிரமங்களை குறைக்கும் முகத்தான் இன்றைக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயற்படுத்தி வருவதன் மூலம் இன்றைக்கு பெண் சிசு கொலை அதிகமாக குறைந்திருக்கிறது என்ற ஒரு கருத்தை வெளியிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு எடுத்துக்கொண்டால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் 'மாதராய் பிறப்பதற்கு நல் மாதவம் செய்திட வேண்டும் அம்மா' என்ற அளவுக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திருப்பெயரைத் தாங்கி இருக்கக்கூடிய 15 அம்ச திட்டமானாலும் சரி; பெண் குழந்தைகளைப் பாதுகாக்கின்ற திட்டமானாலும் சரி; இன்றைக்கு சமுதாயத்தில் மறுமலர்ச்சியை உருவாக்கக்கூடிய ஒரு மிகப்பெரிய திட்டங்களாக அமைந்துள்ள இந்தத் திட்டங்களின் சிறப்புகளை ஒருசில பகுதிகளில் இருக்கின்ற பாமர மக்கள் அறியாமல் இருக்கிறார்கள். எனவே, இந்தத் திட்டங்களின் சிறப்பு இயல்புகளை பற்றியும், இந்தத் திட்டங்களுக்கு எவ்வாறு அப்ளை செய்யவேண்டும் என்பதைப் பற்றியும் மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் இங்கே விரிவாக விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண் குழந்தையே இல்லாத பெற்றோர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் இரண்டாவது பெண் குழந்தையின் பெயரில் 5 ஆயிரம் ரூபாய் டெப்பாசிட் செய்யப்படும். அவர்களுடைய குடும்பத்தின் ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக இருக்கவேண்டும். 11.11.1993–க்கு பிறகு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் தாய் அல்லது தந்தை 40–வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு இந்தச் சலுகை அளித்திட கருதப்பட்டு வருகிறது. பயன்பெறும் குழந்தை 3 வயதுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். பெண் குழந்தையின் பெயரில் 5 ஆயிரம் ரூபாய் வைப்பு நிதியாக வைக்கப்படும். பதிவு செய்யும் நாளிலிருந்து நிறைவுறும் முதல் ஆண்டு முடிவில் அல்லது குழந்தையின் முதல் பிறந்த நாள் அன்று ரூபாய் 800 மதிப்புள்ள 2 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் 'ஜெ' என்ற இன்ஷியலோடு அந்தக் குழந்தையின் கையில் பரிசு அளிக்கப்படும். பெண் குழந்தை 21 வயது அடைகிறபோது கிடைக்கும் மொத்த பலன் மதிப்பு ரூபாய் 20 ஆயிரம் ஆகும். பாஸ் புக் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு டோக்கன் கிழித்துத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடுநடுவே குழந்தையின் படிப்பிற்கு உதவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆக இவ்வளவு எல்லாம் இருக்கக்கூடிய குழந்தையினுடைய தாய்மார்கள் இந்தத் திட்டத்தில் விண்ணப்பித்தால் அவர்களுக்கு இந்தத் திட்டத்தினுடைய பயன் முழுமையாக கிடைக்கும். இதற்காக 4 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். இதுவரை 3,040 பேர் இதன்மூலம் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் குழந்தைளை காப்பாற்றும் தொட்டில் திட்டத்தின் கீழ் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் சென்ற ஆண்டு எத்தனை பெண் குழந்தைகள் காப்பாற்றப்பட்டு உள்ளன? இந்த ஆண்டு பெண் சிசுக்களைக் காப்பாற்றும் ஆண்டாக அறிவிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1994 ஜனவரி 3]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போன ஆண்டு 59 குழந்தைகள் காப்பாற்றப்பட்டு தொட்டிலில் இடப்பட்ட குழந்தைகள் தொண்டு நிறுவனங்கள் மூலமாக, அரசின் மூலமாக, பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்தக் குழந்தைகளின் பெயரால் தலா 5 ஆயிரம் ரூபாய் டெப்பாசிட் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. தொண்டுள்ளம் படைத்த பலரும் அந்தக் குழந்தைகளின் பெயரால் பல்வேறு வைப்புநிதியை இன்றைக்கு அளித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு குழந்தைகளே தொட்டிலுக்கு வராமல் பாதுகாக்கக்கூடிய அளவுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் சிசுவைக் கொலை செய்வதைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் தொட்டில் குழந்தைகள் திட்டம் துவக்கிய இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் இரக்கமற்றச் செயலைச் செய்யும் அந்தக் கொடியவர்களைத் தண்டிக்க கடுமையான முறையில் சட்டத் திருத்தங்கள் செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதே 17 பேர் மீதும் கடுமையான வழக்குகள் தான் போடப்பட்டிருக்கின்றன. அவர்கள் மீது கொலை செய்த குற்றத்தினுடைய, சட்டத்தினுடைய எண்கள் தான் போடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10.45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற குற்றங்களைப்போல் அல்லாமல், பெண் சிசு வதையில் பெற்றோர்களும் அல்லது குடும்பத்தாருமே குற்றவாளிகள் ஆக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட பெண் சிசு கொலை வழக்குகளில் குற்றவாளியைக் கணடுபிடிக்க அரசு என்ன வரைமுறைப் படுத்தப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறது. ஒரு பெண் சிசு கொலை செய்யப்பட்டால் குறிப்பிட்ட ஒருவர்மீது தண்டனை விதிக்கப்படுகிறதா? அல்லது குடும்பத்தார் மீது தண்டணை விதிக்கப்படுகிறதா? வரைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக ஒரு குடும்பத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுவதைவிட, அந்தக் குற்றத்தைச் செய்வதற்கு யார் தூண்டுகோலாக இருந்தார்களோ, யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சில நேரங்களிலே மாமனார், மாமியார் போன்றவர்கள் இந்தக் கொலைக் குற்றங்களுக்குக் காரணமாக இருக்கிறார்கள். பெற்ற தாய்மார்களே அதை கண்டுபிடித்து காவல்துறை அதிகாரிகளிடத்திலே புகார்களைக் கொடுக்கும்போது குறிப்பிட்டு பெயர்களைச் சொல்லியே கொடுக்கின்ற காரணத்தினால் அரசு சிரமமில்லாமல் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை எடுத்து வருகின்றது. இந்தக் கொலைக் குற்றங்களைச் செய்வதற்குத் தூண்டுகோலாக இருப்பவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதன் மூலமாக மட்டும் இதைத் தடுத்துவிட முடியும் என்று அரசு கருதவில்லை. இதற்கு, தகுந்த முறையில் விழிப்புணர்ச்சி ஊட்டக்கூடிய வகையில் அவர்களுக்கு பல்வேறு பிரச்சாரங்களை இன்றைக்கு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகவும் நம்முடைய தமிழகத்தின் பெண் சட்டமன்ற உறுப்பினர் மூலமாகவும் அரசு செய்து வருகிறது. இதற்கு யூனிசெஃப் நிறுவனம் மிகப்பெரிய உதவியாக இருந்து இந்தப் பிரச்சாரத்திற்கு ஆகின்ற செலவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு இன்றைக்கு இந்தக் காரியத்தை முழுமையாகச் செய்கின்ற காரணத்தினால், சேலத்தில் கடந்த 4 மாதங்களாக பெண் சிசு கொலை அறவே இல்லை என்று சொல்லுகின்ற சூழ்நிலை இன்றைக்கு உருவாகிக்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 131, திரு. பி. வி. இராஜேந்திரன் இருக்கையில் இல்லை. இந்தக் கேள்வி இராமநாதபுரம் மாவட்டத்தைப்பற்றியதால், டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் கேட்பார்கள். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

131–

இராமநாதபுரத்தில் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியின் திருவுருவச் சிலை அமைத்தல்.

10501–திரு. பி.வி. இராஜேந்திரன்:***